செய்தி வெளியீடு எண்: 651 நாள் :30.11.2013

**தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்**
11/22, மாங்காடு சாமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034
தொலைபேசி எண் 044–28221233 தொலைநகல் 044–28253021

TACTV

---

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ.70/- என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO) உரிமம் மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC) உரிமம் வழங்கும் நடைமுறைகள் தற்போது மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன்படி, மேற்காணும் உரிமங்கள் பெறுதல் தொடர்பாக இந்நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து (www.tactv.in) பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் மேலாண்மை இயக்குநர், தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 11/22, மாங்காடு சாமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் அனுப்பினால் போதுமானது.

**உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO)** உரிமம் பெற்று நடத்த விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் நகல், அஞ்சலக உரிமம், பதிவுக்கட்டணம் ரூ.1,000/-க்கான வங்கி வரைவோலை மற்றும் மூன்று மாத முன் வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை ஆகியவற்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

**தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள்** (PLC) உரிமம் பெற்று நடத்த விரும்புபவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் நகல், அஞ்சலக உரிமம், சேவை வரி பதிவுச் சான்று மற்றும் மூன்று மாத முன் வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை ஆகியவற்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

மேலும் ரூ.5,000/-க்கு மேல் மாதாந்திரக் கட்டணத் தொகை செலுத்துவோர் 1.1.2014 முதல் கண்டிப்பாக ஆன் லைன் (Net Banking) மூலமாக மட்டுமே செலுத்தும்படி 17.11.2013 அன்று செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. எனினும், ரூ.5,000/-க்கு மேல் மாதாந்திரக் கட்டணத் தொகை செலுத்துவோர், தாங்கள் விரும்பினால் 1.12.2013 முதல் ஆன் லைன் (Net Banking) மூலமாகவும் செலுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**மேலாண்மை இயக்குநர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9